# சிதம்பரம் நகராட்சி

**2020 ம் ஆண்டு புரட்டாசி திங்கள் 14–ம் நாள் 30.09.2020 புதன் கிழமை காலை 10.30 மணியளவில் நடைபெறும் சாதாரண நகர்மன்ற கூட்டம் நடைபெறும்**

**மன்றக்கூட்டப் பொருள்**

**1)** சிதம்பரம் நகராட்சியின் சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதாரப் பாதுகாப்பு மற்றும் ஒழுங்குமுறை சட்டம்) விதிகள் கடலூர் மாவட்ட அரசிதழில் பிரசுரம் செய்வதற்கு, விருத்தாசலம், அரசு கிளை அச்சக கிளை மேலாளர் அவர்களின் 06.08.2020 தேதிய ந.க.10/பி.தி.பி./2020 எண்ணிட்ட கடிதத்தில் 'A4" அளவு பிரசுர கட்டணம் பக்கம் 1–க்கு ரூ.2,100/– வீதம் 11 பக்கத்திற்கு ரூ.23,100/– (ரூபாய் இருபத்து மூன்றாயிரத்து நூறு மட்டும்) வழங்கிட கோரப்பட்டுள்ளதற்கிணங்க, கிளை மேலாளர், அரசு கிளை அச்சகம், விருத்தாசலத்திற்கு மேற்படி தொகையினை வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**
1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) நகர்மன்ற தீர்மானம் எண்.129, நாள்31.12.2019–ல் சாலையோர வியாபாரிகளுக்கான உப விதிகள் மாவட்ட அரசிதழில் பிரசுரம் செய்திடவும், அதற்குரிய செலவு தொகைக்கும் மன்றம் அனுமதி வழங்கியுள்ளது. தற்போது அரசு அச்சகம் மூலம் பிரசுர செலவினம் ரூ.23,100/–க்கு தொகை வழங்கிட மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.3161/2014/எப்1)**

**2)** சிதம்பரம் கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் சிதம்பரம் காந்தி நகர் இடம் தொடர்பாக, திரு தாமஸ் என்பவரால் தொடரப்பட்ட வழக்கு எண். O.S No.34/2012–ல் 01.10.2018–ம் தேதிய தீர்ப்பில், நகராட்சிக்கு சார்பாகவும், இத்தீர்ப்பை எதிர்த்து சிதம்பரம் கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் திரு தாமஸ் அவர்களால் மேல்முறையீடு செய்யப்பட்ட வழக்கு எண். A.S No.01/2019–ல் 23.01.2020–ம் தேதிய தீர்ப்பில், நகராட்சிக்கு பாதகமாகவும் தீர்ப்புகள் வரப்பெற்றுள்ளது. இதனை எதிர்த்து, சென்னை உயர்நீதிமன்றத்தில் நகராட்சியால் 2–வது மேல்முறையீடு செய்யவும், மேல்முறையீட்டு வழக்கினை திரு P. ஸ்ரீநிவாஸ் வழக்கறிஞர் அவர்கள் வசம் ஒப்படைத்து வழக்கினை நடத்தவும் வழக்காடு கட்டணமாக ரூ.15,000/– செலுத்தவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) வழக்கினை நடத்திடவும் மற்றும் வழக்காடு கட்டணம் ரூ.15,000/– வழங்கிட மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(ந.க.எண்.303/2019/எப்1)**

**3)** மாண்புமிகு புரட்சி தலைவி அம்மா விரிவான விபத்து மற்றும் ஆயுள் காப்பீட்டு திட்டத்தில் வறுமைக்கோட்டிற்கு கீழ்வாழும் பயனாளிகளின் பட்டியல்கள் தயார் செய்து, **அரசாணை எண்.273, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, பேரிடர் மேலாண்மை பிரிவு D.M.I(2) நாள்:04.06.2020–ன்**மூலம் காப்பீட்டு தொகை வழங்கிட உத்தரவிடப்பட்டுள்ளது. மேற்படி அரசாணையினை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

மேற்கண்ட வழிகாட்டுதல்படி, கடலூர் மாவட்ட ஆட்சித் தலைவர், செயல்முறை உத்தரவு ந.க.எண்.ஐ4/14928/2020, நாள் : 18.08.2020–ல் மாவட்ட ஆட்சியர் தலைமையில் அனைத்து நகராட்சி ஆணையர் உள்பட 11 நபர்களை உறுப்பினர்களாக நியமித்து உத்தரவிடப்பட்டுள்ளது. மேலும், நகராட்சி நிர்வாக ஆணையர்–பொறுப்பு, சென்னை அவர்களின் செயல்முறை உத்தரவு ந.க.எண்.12635/2020/UPA3–1. நாள்: 28.08.2020–ல் சிதம்பரம் நகராட்சி பகுதிகளில் வாழும் வறுமைக் கோட்டு பட்டியலில் உள்ள 9757 பயனாளிகள் பட்டியலை சரிபார்த்து கணினி பதிவேற்றம் செய்து, அதற்கான தொகை உள்ளாட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்திட உத்தரவிடப்பட்டுள்ளது.

அவ்வகையில், மேற்படி திட்டத்தில் பயனாளிகள் பட்டியல் கணக்கெடுப்பு செய்து, அதனை கணினியில் பதிவேற்றம் செய்வதற்கு கணக்கெடுப்பாளர்கள், மேற்பார்வையாளர்கள் கணினி பதிவேற்றும் நபர்கள், பட்டியல் இறுதிசெய்யும் அலுவலர்கள் ஆகியோர்களுக்கு அரசு வழங்கிடும் தொகைப்படி ஊதியம் வழங்கிட, இத்திட்டத்தின்படி ஒரு பதிவிற்கு தோராயமாக ரூ.10/– வீதம் 9757 பதிவிற்கான செலவினம் ரூ.97,570/– மதிப்பீட்டில் பணியினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u> 1)** மன்றம் பதிவு செய்யலாம்.
2) மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.3548/2020/எப்1)**

**4)** இந்நகராட்சிக்குட்பட்ட மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி, வக்காரமாரி தலைமை நீரேற்று நிலையம், மீன்மார்கெட், பேருந்து நிலையம் மற்றும் இதர இடங்களில் குடிநீர் பணிக்காக இயங்கி வரும் 11 சப்மெர்சிபில் மின்மோட்டார்கள், 40 எச்.பி சென்டிரிபிகல் மின்மோட்டார் ஆகியவற்றில் அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை அகற்றவும் மோட்டார் காயில் கட்டவும், பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளவும் தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.6,00,000/–க்கும் அதற்கான செலவினத் தொகையினை நகராட்சியின் குடிநீர் விநியோக நிதி 2020–21–ன்கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

**5)** இந்நகராட்சிக்குட்பட்ட 33 வார்டுகளில் 57 எண்ணிக்கையில் மினி பவர் பம்புகள் இயங்கி வருகிறது. இதில் அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை அகற்றவும் மோட்டார் காயில்

கட்டவும், பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளவும் தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.10,00,000/—க்கும் அதற்கான செலவினத் தொகையினை நகராட்சியின் குடிநீர் விநியோக நிதி 2020—21—ன்கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

**6)** இந்நகராட்சி நாகச்சோரி குளம் Environmentalist Foundation of India தொண்டு நிறுவனம் மூலம் தூர்வாரப்பட்டு கரை அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. மேற்படி குளத்தை நகராட்சி ஆணையர் மற்றும் சார் ஆட்சியர், சிதம்பரம் அவர்கள் பார்வையிட்டபோது நாகச்சேரி குளம் கிழக்கு கரை மற்றும் வடக்கு கரை பகுதியில் அமைந்துள்ள தெருக்களில் உள்ள மழைநீரை கால்வாய்களின் மூலம் சாக்கடை நீர் குளத்தில் செல்வதை தடை செய்யும்படி தெரிவித்தன் அடிப்படையில் கிழக்கு கரையில் இருந்து வடக்கு கரை வரை குழாய் அமைத்து ஏற்கனவே அமைந்துள்ள பாதாள சாக்கடை ஆள் நுழைவு குழியில் இணைத்திட தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.2,50,000/—க்கும் செலவினத் தொகையை நகராட்சியின் வருவாய் நிதி 2020—21—ல் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

**7)** வடகிழக்கு பருவமழை – 2020 முன்னிட்டு மாவட்ட ஆட்சியர் அவர்கள் தலைமையில் காணொலி காட்சியின் வாயிலாக நடைபெற்ற மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக நகராட்சி எல்லையில் உள்ள கால்வாய்களை தூர்வாரவும் தேவையான பாதுகாப்பு உபகரணங்கள் மற்றும் மணல் மூட்டைகள் தயார் நிலையில் வைத்திடவும் தெரிவிக்கப்பட்டது. இதனடிப்படையிலும் மேலும் செயற்பொறியாளர், பொதுப்பணித்துறை/நீ.ஆ.து அவர்கள் கடிதம் நாள் 30.05.2020—ல் ஓமகுளம் உபரி நீர் செல்லும் வாய்கால் பாசன பகுதி எதுவும் இல்லாததால் அதனை நகராட்சி தொடர்ந்து பராமரிப்பு செய்து கொள்ள தெரிவித்ததன்பேரில் நகராட்சி எல்லையில் தொடர்ந்து மழைகாலங்களில் அடைப்பு ஏற்பட்டு வெள்ள நீர் தாழ்வான பகுதியில் செல்ல ஏதுவான கால்வாய்களான ஓமகுளம் நீர்வரத்து மற்றும் நீர் வெளியேறும் கால்வாய், புறவழி சாலை ராஜலட்சுமி நகர் மற்றும் அம்பேத்கார் பகுதியில் அமைந்துள்ள கால்வாய், கனகசபை நகர் அருகில் அமைந்துள்ள கால்வாய் மற்றும் மின்நகர் கால்வாய் ஆகியவற்றை மண்வாரும் இயந்திரத்தை கொண்டு தூர்வார தயாரிக்கப்பட்டுள்ள

மதிப்பீட்டு தொகை ரூ. **5,00,000/–** க்கும் செலவினத் தொகையினை நகராட்சியின் வருவாய் நிதி **2020–21–**ல் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

**8)** இந்நகராட்சி வார்டு எண். **1**, கன்னிராமன் தெரு மெயின் ரோட்டில் அருந்ததியர் தெரு சந்திப்பில் உள்ள பைப் கல்வெர்ட் உடைந்து விட்டது. இதனால் அருந்ததியர் தெருவில் மழைநீர் தேங்கி வெளியேற முடியாமல் குடியிருப்பு பகுதிகளில் நுழைவதால், அப்பகுதியில் சுகாதார கேடு ஏற்படுகிறது. மேலும், பொதுமக்கள் உடனடியாக உடைந்த பாலத்தை கட்டித்தர கோரியதை ஏற்று இதனை புதியதாக சிறுபாலம் அமைக்க தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டு தொகை ரூ.**2,25,000/–**க்கும் செலவினத் தொகையை நகராட்சி வருவாய் நிதி **2020–21–**ன்கீழ் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

**9)** இந்நகராட்சி வார்டு எண். **27–**ல் அப்பாவு தெருவிற்கு தமிழ்நாடு நகர்புற சாலைகள் மேம்பாட்டு திட்டம் **2019–20–**ம் ஆண்டின் கீழ் சிமெண்ட் சாலை அமைக்க பணி மேற்கொள்ளப்பட உத்தேசிக்கப்பட்டு இருந்தது. இந்நிலையில் மேற்படி தெருவின் அகலம் மிகக்குறைவாக உள்ளதால் சிமெண்ட் சாலைக்கு பதிலாக Paver Block கொண்டு சாலை அமைத்து தர பொதுமக்கள் மற்றும் முன்னாள் நகர்மன்ற தலைவர் அவர்கள் கோரிக்கை விடுத்ததின் அடிப்படையில் தமிழ்நாடு நகர்புற சாலைகள் மேம்பாட்டு திட்டம் **2019–20–**ல் எடுக்கப்பட்ட சிமெண்ட் சாலை பணியினை ரத்து செய்து மேற்படி தெருவில் Paver Block சாலை அமைக்க தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டு தொகை ரூ.**7,10,000/–**க்கு ஆகும் செலவு தொகையினை நகராட்சி வருவாய் நிதி **2020–21–**ல் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

**10)** சிதம்பரம் நகராட்சி பகுதியில் குடிநீர் குழாய் இணைப்புகள் வழங்க வரைவு உபவிதிகளை இந்நகர்மன்ற தீர்மான எண். **19**, நாள் : **28.06.2019**–ல் அங்கீகரித்து அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் கடித ந.க.எண்.**12990/2019**/குவ.**3**, நாள்:**10.12.2019–**ல் பொது அங்கீகாரம் வழங்கி உத்தரவிடப்பட்டதை தொடர்ந்து, கடலூர் மாவட்டம் செய்தி மக்கள் தொடர்பு துறை மூலமாக **09.01.2020–**ல் தினதந்தி நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டது.

அவ்விளம்பரத்தில் பொதுமக்களின் ஆலோசனைகள் மற்றும் ஆட்சேபணைகள் ஏதும் இருப்பின் எழுத்து மூலமாகவே, நேரிலோ அல்லது தபால் மூலமாகவே விளம்பரம் செய்யப்பட்ட நாளிலிருந்து 30 நாட்களுக்கு தெரிவிக்க கேட்டுக்கொள்ளப்பட்டது. குடிநீர் உபவிதிகள் (தமிழ் மற்றும் ஆங்கிலம்) கடலூர் மாவட்டம் அரசிதழ் எண். 3, நாள் : 28.03.2020—ல் வெளியிடப்பட்டது.

பொதுமக்களிடமிருந்து ஆட்சேபணைகள் மற்றும் ஆலோசனைகள் ஏதும் வரப்பெறவில்லை. இது குறித்து நகர்மன்றத்திற்கு பொருள் வைக்கப்பட்டு, இந்நகர்மன்ற தீர்மான எண். 58, நாள் 27.08.2020—ல் குடிநீர் உபவிதிகளுக்கு நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் இறுதி அங்கீகாரம் பெற, பிரேரணை அனுப்ப அனுமதி வழங்கப்பட்டது. நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் செயல்முறைகள் ந.க.எண். 12990/2018/குவ.3, நாள் 22.09.2020—ல் குடிநீர் உபவிதிகளுக்கு இறுதி அங்கீகாரம் வழங்கி உத்தரவிடப்பட்டுள்ளது. எனவே, குடிநீர் உபவிதிகளை மாவட்ட அரசிதழில் பிரசுரம் செய்யவும் அதற்கான செலவினை நகராட்சி குடிநீர் நிதியில் மேற்கொள்ளவும் அரசிதழில் பிரசுரம் செய்யப்பட்ட நாளிலிருந்து 90 நாட்களுக்கு பிறகு நடைமுறைக்கு கொண்டுவர மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அரசாணை (நிலை) எண் 126, நாள்: 21.11.2018—ல் வீட்டிணைப்பு வழங்குவதற்கான முன் வைப்புத்தொகை மற்றும் இணைப்பு கட்டணங்களை, சம்பந்தப்பட்ட வீட்டின் வரிவிதிப்புடன் இணைத்து பத்து தவணைகள் வரை தவணை முறையில் வசூலிக்க தெரிவிக்கப்பட்டதன் அடிப்படையில் புதிய இணைப்பிற்கான கட்டணங்களை இதன் அடிப்படையில் வசூல் செய்திடவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

தற்போது தமிழ்நாடு நகர்புற நிதி மற்றும் அடிப்படை வசதிகள் மேம்பாட்டு நிறுவனம் (TUFIDCO) மூலம் வட்டியில்லா கடனாக ரூ.182.40 லட்சத்திற்கு குடிநீர் வீட்டிணைப்பு பணிமேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை ந.க.எண். 13277/2018/குவ1, நாள் 19.06.2018—ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதை தொடர்ந்து ஒப்பந்தபுள்ளி 24.09.2019 அன்று பெறப்பட்டு 04.11.2019 அன்று பணி உத்தரவு வழங்கப்பட்டு பணி நடைபெற்று வருகின்றது.

1. தார்சாலை உள்ள தெருக்களுக்கு வீட்டிணைப்பு வழங்கிட (ஒப்பந்தபுள்ளி 4.05 சதவீதம் கூடுதல் விலையுடன் ) இணைப்பு ஒன்றுக்கு (பொருட்கள் மற்றும் ஆட்கூலி உட்பட மற்றும் GST 12 %) ரூ. 3372/—
2. சிமெண்ட் சாலை உள்ள தெருக்களுக்கு வீட்ணைப்பு வழங்கிட (ஒப்பந்தபுள்ளி சதவீதம் 4.05 கூடுதல் விலையுடன் ) இணைப்பு ஒன்றுக்கு (பொருட்கள் மற்றும் ஆட்கூலி உட்பட மற்றும் GST 12 %) ரூ. 3438/—

மேற்கண்ட விபரப்படி குடிநீர் குழாய் இணைப்புகள் வழங்கவும், அதற்கான தொகையினை அரசாணை (நிலை) எண் 126, நாள்: 21.11.2018—ல் தெரிவித்துள்ளபடி முன் வைப்புத்தொகை, இணைப்பு கட்டணங்களை, மேற்பார்வை கட்டணம், சாலை சீரமைப்பு கட்டணம் மற்றும் Internal plumbing Charges (பொருட்கள் மற்றும் ஆட்கூலி உட்பட மற்றும் GST 12 %) ஆகியவற்றினை சம்பந்தப்பட்ட வீட்டின் வரிவிதிப்புடன் இணைத்து

பத்து தவணைகள் வரை தவணை முறையில் வசூலிக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**11)** தமிழ்நாடு நகரியல் பயிற்சி மையம், கோயம்பத்தூர் அவர்களுக்கு 2020–21ஆம் ஆண்டிற்கான பங்களிப்பு தொகை ரூ.90,000/– வழங்கிட கோரி கடிதம் வரப்பெற்றுள்ளது. மேற்படி பங்களிப்பு தொகையினை வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u>

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மன்ற அனுமதியினை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதியுடன் வழங்கப்பட்டதை ஏற்கலாம்.

**(ந.க.எண்.3397/2020/சி1)**

**12)** சிதம்பரம் நகராட்சி பகுதிகளில் கொரோனா நோய் தொற்று தடுப்பு பணிக்காக நகரின் அனைத்து வார்டுகளிலும் கபசுர குடிநீர் வழங்குவதற்காக கபசுர பவுடர் விநியோகம் செய்ய கோரி சுகாதார ஆய்வர் 24.08.2020ல் குறிப்பு கொடுத்துள்ளார். அதன்படி 33 வார்டுகளுக்கு தேவையான கபசுர குடிநீர் விநியோகம் செய்வதற்கு 25.08.2020 அன்று விலைப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்டுள்ள விவரப்படி இரண்டு விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| **1) மகாதேவ், சாலவந்தன்கோட்டை, திருச்சி** | **–** | **1 Kg** | **ரூ.1,225/–** |
| **2) நேதாஜி, நெ.6, பழனியப்பா நகர், திண்டுக்கல்** | **–** | **1 Kg** | **ரூ.780/–** |

குறைந்த விலைப்புள்ளி கொடுத்த நேதாஜி பார்மஸி, திண்டுக்கல் என்ற நிறுவனத்திற்கு நகராட்சி ஆணையாளரின் முன் அனுமதி பெற்று விநியோக உத்தரவு வழங்கியதற்கும் அதற்கான செலவின தொகைக்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u>

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) அவசர அவசியம் கருதி, ஆணையர் அவர்களின் முன் அனுமதி பெற்று விநியோக உத்தரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(ந.க.எண்.948/2020/எச்1)**

**13)** சிதம்பரம் நகராட்சிக்கு சொந்தமான கடைகள் மற்றும் ஓராண்டு குத்தகை இனங்களின் கேட்பினை கோவிட் 19 நோய் கிருமியினை கட்டுப்படுத்த வேண்டி பொது

ஊரடங்கு அமுல்படுத்தப்பட்ட காலமான **01.04.2020** முதல் **31.05.2020** வரையிலான காலத்திற்கு தள்ளுபடி செய்ய வேண்டி அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. அரசாணை எண்.**298**, நாள்.**02.09.2020** ஐ நடைமுறைபடுத்த மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u> :**
மன்றம் அனுமதிக்கலாம்

**ந. க. எண். 3439 / 2017 / அ1**

**14)** நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.**29280/2020**/WB, நாள்.**25.09.2020**யில் சிதம்பரம் நகராட்சி செலுத்த வேண்டிய UTIS Connectivity Charges **01.10.2019** முதல் **31.12.2019** வரை ரூ.**63,216/– 01.01.2020** முதல் **31.03.2020** வரை ரூ.**63,216** ஆக கூடுதல் ரூ.**126432/–**ஐ BSNL நிறுவனத்திற்கு செலுத்திட தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி தொகையினை செலுத்திட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u> :**

1) மன்றம் அனுமதிக்கலாம்
2) அவசர அவசியம் கருதி மன்ற அனுமதி எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்படி தொகையினை வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.

**ந. க. எண். 1926 / 2016 / சி3**

**இடம்: சிதம்பரம்** **தனி அலுவலர்,**
**நாள்: 30.09.2020** **சிதம்பரம் நகராட்சி**